## இயல் இரண்டு

# ஓதுவது ஒழியேல்




### கற்றல் நோக்கங்கள்

- *கல்வியே அனைத்திற்கும் அடிப்படை என்பதனை உணர்தல்*
- *எளிய பாடல்களைச் சீர்பிரித்துப் படித்துப் பொருள் புரிந்துகொள்ளுதல்*
- *கதை படிக்கும் ஆர்வத்தை உருவாக்குதல்*
- *மொழியில் உள்ள எழுத்துகள் சொற்கள் ஆகியவற்றின் கட்டமைப்பை அறிந்து பயன்படுத்துதல்*



7th Std - Tamil Term 2.indd 25 01-08-2020 15:11:20

இயல்
இரண்டு

கவிதைப்பேழை

# இன்பத்தமிழ்க் கல்வி

DY5PEV

**நுழையும்முன்**


பாரதிதாசன் கவிதை எழுதுவதற்காகத் தாளையும் எழுதுகோலையும் எடுத்தார். எதைப்பற்றி எழுதுவது எனச் சிந்தித்தார். வானம், ஓடை, காடு, தென்றல், மயில் போன்ற இயற்கைப் பொருள்கள் எல்லாம் அவர் கருத்தைக் கவர்ந்தன. எனினும் புரட்சிக்கவிஞராகிய பாவேந்தர் தமிழரின் இன்னல் தீர்க்கும் வழி ஒன்றைக் கவிதையாகப் படைத்தார். அதை நாமும் படித்துச் சுவைப்போம்.

*ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட*
*என்னை எழுதென்று சொன்னது வான்*
*ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்*
*ஓவியந் தீட்டுக என்றுரைக்கும்*
*காடும் கழனியும் கார்முகிலும் வந்து*
*கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்*
*ஆடும் மயில் நிகர் பெண்களெல்லாம் உயிர்*
*அன்பினைச் சித்திரம் செய்க என்றார்*

*சோலைக் குளிர்தரு தென்றல் வரும்பசுந்*
*தோகை மயில்வரும் அன்னம் வரும்*
*மாலைப் பொழுதினில் மேற்றிசையில் விழும்*
*மாணிக்கப் பரிதி காட்சி தரும்*
*வேலைச் சுமந்திடும் வீரரின் தோள் உயர்*
*வெற்பென்று சொல்லி வரைக என்னும்*
*கோலங்கள் யாவும் மலை மலையாய் வந்து*
*கூவின என்னை – இவற்றிடையே*

*இன்னலிலே தமிழ் நாட்டினிலேயுள்ள*
*என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்*
*அன்னதோர் காட்சி இரக்கமுண்டாக்கியென்*
*ஆவியில் வந்து கலந்ததுவே*
*இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்*
*என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால்*
*துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில்*
*தூய்மை உண்டாகிடும் வீரம் வரும் !*

– பாரதிதாசன்





7th Std - Tamil Term 2.indd 26 01-08-2020 15:11:20

### சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| எத்தனிக்கும் | முயலும் | பரிதி | கதிரவன் |
| வெற்பு | மலை | அன்னதோர் | அப்படிஒரு |
| கழனி | வயல் | கார்முகில் | மழைமேகம் |
| நிகர் | சமம் | துயின்றிருந்தார் | உறங்கியிருந்தார் |

### பாடலின் பொருள்

கவிதை எழுத ஏடு ஒன்று எடுத்தேன். என்னைக் கவிதையாக எழுதுக என்று வானம் கூறியது. நீரோடையும் தாமரை மலர்களும் "எங்களைக் கவி ஓவியமாகத் தீட்டுக" என்றன. காடும் வயல்களும் கருநிற மேகங்களும் என் கண்களைக் கவர்ந்து, கவிதையில் இடம்பெற முயன்றன. ஆடும் மயில் போன்ற பெண்கள் "அன்பினைக் கவிதையாக எழுதுக" என்றனர்.

சோலையின் குளிர்ந்த தென்றல் வந்தது. பசுமையான தோகையையுடைய மயில் வந்தது. அன்னம் வந்தது. மாணிக்கம் போல் ஒளி வீசி மாலையில் மேற்குத் திசையில் மறைகின்ற கதிரவனும் வந்தான். வேல் ஏந்திய வீரர்கள், "மலை போன்ற எங்களது தோள்களின் அழகினை எழுதுங்கள்" என்றனர். இவ்வாறு அழகிய காட்சிகள் எல்லாம் பெருந்திரளாக வந்து தங்களைக் கவிதையாக எழுதுமாறு கூறின.

ஆனால், துன்பத்தில் கிடக்கும் என் தமிழ்நாட்டு மக்கள் அறியாமையில் தூங்கிக் கிடக்கிறார்கள். அந்தக் காட்சி என் மனத்தில் இரக்கத்தை உண்டாக்கி, என் உயிரில் வந்து கலந்து விட்டது. இத்துன்பம் நீங்க அனைவரும் இன்பத்தமிழ்க் கல்வியைக் கற்றவர்கள் என்னும் நிலை ஏற்பட வேண்டும். அந்நிலை ஏற்பட்டால் வாழ்வில் துன்பங்கள் நீங்கிடும். நெஞ்சில் தூய்மை உண்டாகிடும். வீரம் வரும்.

### நூல் வெளி

கவிஞர், இதழாளர், தமிழாசிரியர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் பாரதிதாசன். இவர் கவிதை, கதை, கட்டுரை, நாடகம் ஆகியவற்றைப் படைப்பதில் வல்லவர். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசையமுது, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய பிசிராந்தையார் என்னும் நாடகநூலுக்குச் சாகித்திய அகாடமி விருது அளிக்கப்பட்டது.



பாரதிதாசன் கவிதைகள் என்னும் தொகுப்பிலிருந்து தமிழ்ப்பேறு என்னும் தலைப்பில் உள்ள பாடல் இங்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

1. இயற்கைக்காட்சி குறித்து நான்கு வரிகளில் கவிதை எழுதுக.
2. 'தாய்மொழி வழிக் கல்வியே சிறந்தது' என்பது குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.



7th Std - Tamil Term 2.indd 27 01-08-2020 15:11:20

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது________.

   அ) மயில் ஆ) குயில் இ) கிளி ஈ) அன்னம்

2. பின்வருவனவற்றுள் 'மலை'யைக் குறிக்கும் சொல்

   அ) வெற்பு ஆ) காடு இ) கழனி ஈ) புவி

3. 'ஏடெடுத்தேன்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.

   அ) ஏடெ + டுத்தேன் ஆ) ஏட்டு + எடுத்தேன்

   இ) ஏடு + எடுத்தேன் ஈ) ஏ + டெடுத்தேன்

4. 'துயின்றிருந்தார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.

   அ) துயின்று + இருந்தார் ஆ) துயில் + இருந்தார்

   இ) துயின்றி + இருந்தார் ஈ) துயின் + இருந்தார்

5. என்று + உரைக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

   அ) என்றுஉரைக்கும் ஆ) என்றிரைக்கும்

   இ) என்றரைக்கும் ஈ) என்றுரைக்கும்

**பொருத்துக.**

1. கழனி - கதிரவன்
2. நிகர் - மேகம்
3. பரிதி - சமம்
4. முகில் - வயல்

**குறுவினா**

1. பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?
2. தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?

**சிறுவினா**

'இன்பத்தமிழ்க் கல்வி' - பாடலின் மையக்கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.

**சிந்தனை வினா**

தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் ஏற்படும் நன்மைகளாக நீங்கள் கருதுவனவற்றைத் தொகுத்து எழுதுக.



7th Std - Tamil Term 2.indd 28 01-08-2020 15:11:20

கவிதைப்பேழை

இயல் இரண்டு

# அழியாச் செல்வம்

E7N8CB

**நுழையும்முன்**

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பல்வகையான செல்வங்களைச் சேர்த்து வைக்கின்றனர். அவற்றுள் சில செல்வங்கள் களவு போகவோ, அழியவோ கூடும். ஆகையால் பெற்றோர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வங்களுள் சிறந்ததும், அழியாததும் ஆகிய செல்வத்தைப் பற்றி அறிவோம்.

*வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை*
*மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்*
*எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன*
*விச்சைமற்று அல்ல பிற.**

*–சமண முனிவர்*

## சொல்லும் பொருளும்

வைப்புழி – பொருள் சேமித்து வைக்கும் இடம்

கோட்படா –ஒருவரால் கொள்ளப்படாது

வாய்த்து ஈயில் – வாய்க்கும்படி கொடுத்தலும்

விச்சை – கல்வி

## பாடலின் பொருள்

கல்வியைப் பொருள் போல வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்படாது. ஒருவற்கு வாய்க்கும்படி கொடுத்தாலும் குறைவுபடாது. மிக்க சிறப்பினை உடைய அரசராலும் கவர முடியாது. ஆதலால் ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகா.

### நூல் வெளி

நாலடியார் சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூலாகும். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இது நானூறு வெண்பாக்களால் ஆனது. இந்நூலை நாலடி நானூறு என்றும், வேளாண்வேதம் என்றும் அழைப்பர். திருக்குறள் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. இந்நூல் திருக்குறளுக்கு இணையாக வைத்துப் போற்றப்படுவதை நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்னும் தொடர் மூலம் அறியலாம்.



7th Std - Tamil Term 2.indd 29 01-08-2020 15:11:21

## கற்பவை கற்றபின்

1. கல்வியின் சிறப்பை விளக்கும் பிற பாடல்களைத் திரட்டி எழுதுக.
2. கல்வியின் சிறப்பை விளக்கும் கதை ஒன்றனை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.
3. பின்வரும் பாடலைப் படித்து மகிழ்க.

வெள்ளத்தால் அழியாது வெந்தணலால்
 வேகாது வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
 நிறைவன்றிக் குறைவு றாது
கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கு
 மிகஎளிது கல்வி யென்னும்
உள்ளபொருள் உள்ளிருக்கப் புறத்தேயோர்
 பொருள்தேடி உழல்கின் றீரே – தனிப்பாடல் திரட்டு.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் _____.
 அ) வீடு  ஆ) கல்வி  இ) பொருள்  ஈ) அணிகலன்
2. கல்வியைப் போல் _____ செல்வம் வேறில்லை.
 அ) விலையில்லாத  ஆ) கேடில்லாத  இ) உயர்வில்லாத  ஈ) தவறில்லாத
3. 'வாய்த்தீயின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
 அ) வாய்த்து + ஈயின்  ஆ) வாய் + தீயின்  இ) வாய்த்து +தீயின்  ஈ) வாய் + ஈயின்
4. 'கேடில்லை ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
 அ) கேடி + இல்லை  ஆ) கே +இல்லை
 இ) கேள்வி + இல்லை  ஈ) கேடு + இல்லை
5. எவன் + ஒருவன் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
 அ) எவன்ஒருவன்  ஆ) எவன்னொருவன்  இ) எவனொருவன்  ஈ)ஏன்னொருவன்

குறுவினா

கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.

சிறுவினா

கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

'கல்விச் செல்வம் அழியாத செல்வம் எனப்படுவது ஏன்?' – சிந்தித்து எழுதுக.

உரைநடை உலகம்

இயல்
இரண்டு

# வாழ்விக்கும் கல்வி

F8GDH7

**நுழையும்முன்**

உலகில் பலவகையான செல்வங்கள் உள்ளன. அவற்றுள் அழியாத செல்வம் கல்விச் செல்வம் ஆகும். பிற செல்வங்கள் அனைத்தும் அழியும் தன்மையுடையன. கல்வி கற்பதற்குக் கால எல்லை இல்லை. கல்வியின் இன்றியமையாமை, கற்க வேண்டிய நூல்கள், கற்கும் கால அளவு ஆகியவற்றைக் குறித்து அறிந்து கொள்வோம்.




உலகிலுள்ள உயிரினங்களுள் மனிதப்பிறவி தனித்தன்மை உடையது. ஏனென்றால் மனிதப் பிறவிக்குத்தான் எதிர்காலம் சொல்ல முடியாது. ஒரு வாழைக்கன்று வைத்தால் அஃது எதிர்காலத்தில் வாழைமரமாகி வாழையிலை, வாழைப்பூ, வாழைக்காய், வாழைப்பழம், வாழைத்தண்டு ஆகியவற்றைத் தரும் என்று வைக்கும்போதே சொல்லலாம். ஒரு பசுமாடு கன்று ஈன்றால் அஃது எதிர்காலத்தில் பால் தரும் என்று சொல்லிவிடலாம். மனிதன் எதிர்காலத்தில் என்ன ஆவான் என்று சொல்லவே முடியாது. அதனால்தான் இஃது அருமையான பிறவி.

ஒரு வீட்டில் குழந்தை பிறந்து அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் என்ன குழந்தை பிறந்திருக்கிறது என்று கேட்டால், ஆண்குழந்தை அல்லது பெண்குழந்தை என்றுதான் பெற்ற தாய் சொல்லுவாள். அப்படி இல்லாமல் ஒரு மாவட்ட ஆட்சியர் பிறந்திருக்கிறார் என்று சொல்ல முடியுமா? மகாத்மா காந்தி பிறந்த உடனே அவரது தாயார் புத்திலிபாயிடம் போய் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் 'என்ன குழந்தை?' என்று கேட்டார்கள். ஆண் குழந்தை என்றுதானே அந்த அம்மா சொல்லி இருப்பார். அப்படி இல்லாமல் "இப்போதுதான்



7th Std - Tamil Term 2.indd 31 01-08-2020 15:11:21

மகாத்மா காந்தியடிகள் பிறந்திருக்கிறார். உங்களுக்கெல்லாம் சுதந்திரம் வாங்கிக் கொடுக்கப் போகிறார்" என்றா சொல்லியிருப்பார்?

## காலமறிதல்

உலகில் மிகவும் அருமையானது என்னவென்றால் அது காலம்தான். மற்றவை எல்லாம் போனால் வரும். காலமும் நேரமும் போனால் வராது. மேசை நாற்காலி போனால் வரும். ஆனால் தேர்வு நேரத்தில் ஒரு பையன் நான்கு நாள்களை வீணடித்து விட்டால் போனது போனதுதான். இன்னொரு மாணவனிடத்திலே கடன் கேட்க முடியாது. "ஒரு நாலு நாள் இருந்தால் கொடுடா! மனப்பாடம் பண்ணிவிட்டுத் திரும்பத் தந்து விடுகிறேன்" என்றெல்லாம் கேட்க முடியாது. இதற்காகத்தான் காலமறிதல், கல்வி என்னும் இரண்டு அதிகாரங்களையும் திருவள்ளுவர் எழுதியுள்ளார்.

## அழியாச்செல்வம்

இந்த உலகத்தில் எல்லாச் செல்வமும் மறைந்துவிடும்; அழிந்துவிடும். நான் வெளியூர் சென்றபோது நண்பரைக் கேட்டேன், "இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே இங்கே ஒரு பெரிய ஆலமரம் இருந்ததே, அஃது எங்கே?" என்று. "அது புயல் காற்றிலே விழுந்து விட்டது" என்று சொன்னார். அஃது அழிகிற செல்வம். "அங்கே ஒரு பெரிய கட்டடம் இருந்ததே, அஃது எங்கே?" என்று கேட்டேன். "அது மழை பெய்து இடிந்து விட்டது" என்று பதில் வந்தது. இதுவும் அழிகிற செல்வம்.

நாம் பேசும் போது, "அதோ போகிறாரே, அவர் பத்து ஆண்டுகளுக்கு முன்னே இரண்டு இலட்ச ரூபாய் வைத்திருந்தார். இப்போது எல்லாம் செலவாகிப்போய் இரண்டு ரூபாய் கடன் கேட்கிறார்" என்று சொல்வோம். இஃது அழிகிற செல்வம். கல்வி அப்படிப்பட்டதன்று. "அதோ போகிறாரே அவர் பத்து ஆண்டுகளுக்கு முன்னே பட்டம் பெற்றிருந்தார். இப்போது எல்லாம் செலவாகிப்போய் வெறும் பத்தாம் வகுப்பு ஆகி விட்டார்" என்று சொல்ல மாட்டோம். ஏனென்றால் கல்வி அழியாதது. அதனால்தான்,

*கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை* (குறள் 400)

என்று வள்ளுவர் கூறுகிறார்.

## ஒளிவிளக்கு

கல்வி ஓர் ஒளிவிளக்கு. அதாவது இருக்கும் இடத்தை ஒளிமயமாக ஆக்குவது. அதனுடைய குறிப்பு என்னவென்றால் ஒருவன் கற்றுவிட்டால், அப்படிக் கற்ற கல்வியைப் பலருக்கும் அளிக்க வேண்டும். அப்படிப் பலருக்கும் ஒளி தருவதுதான் கல்வி. கல்வி இல்லாத நாடு விளக்கில்லாத வீடு. விளக்கில்லாத வீட்டில் யார் குடியிருப்பார்கள்? வீடு இருட்டாக இருக்கும். அதுபோல் கல்வி இல்லாத குடும்பத்தை யாரும் மதிக்கமாட்டார்கள்.

## கற்றவரும் கல்லாதவரும்

கல்வியறிவு இல்லாதவர்களைத் திருவள்ளுவர் போல் குறை கூறியவர் வேறு எவரும் இல்லை.

*விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனை யவர்* (குறள் 410)



7th Std - Tamil Term 2.indd 32 01-08-2020 15:11:21

என்னும் திருக்குறளில் கல்வியறிவு இல்லாதவனை விலங்கு என்கிறார். ஏன் விலங்கு என்று சொன்னார்? அது சொன்னால் கேட்காது. மாடு ஒன்று தெருவில் வருகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த மாட்டைப் பார்த்து, "நான் வீட்டுக்குப் போகிறேன். என் பின்னாலேயே வா" என்றால் வருமா? நம்கூட அது வருவதற்குக் கையில் பச்சைப்புல் வைத்துக்கொண்டு காட்டவேண்டும். அது மட்டுமில்லாமல் விலங்கு நல்ல செயல்களைத் தானாகச் செய்யாது.

ஒரு பசுமாடு இருக்கிறது. ஒரு பொருளை உருட்ட வேண்டும் என்றால் அது தானாகவே போய் உருட்டிவிடும். ஒருபொருளை உடைக்க வேண்டும் என்றால் தானாகவே போய் உடைத்துவிடும். ஓர் ஆளை முட்ட வேண்டுமென்றால் தானாகவே போய் முட்டிவிடும். இவ்வளவும் கெட்ட செயல்கள். இவ்வளவும் செய்த அந்தப் பசுமாடு பால் கொடுப்பது நல்ல செயல். ஆனால் அதைத் தானாகக் கொடுக்காது. தானாகவே நம் வீட்டிற்குள் வந்து, 'எங்கே சொம்பைக் காணோமே?' என்று அதுவாகவே எடுத்து வந்து பாலைக் கொடுத்து விட்டுப் போகாது. நல்ல செயலை மனிதன் தானாகச் செய்ய வேண்டும் என்கிறார் வள்ளுவர். இன்னொருவர் வந்து சொல்ல வேண்டும் என்று காத்திருக்கக் கூடாது. நன்றின்பால் உய்ப்பது அறிவு என்று வள்ளுவர் இதற்காகத்தான் சொன்னார். அந்த அறிவைப் பெற உதவுவது கல்வி.

### கல்வியும் பள்ளியும்

கல்வி கற்பதற்காகவே குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறோம். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களால்தான் இளம்பிள்ளைகளை நல்ல குடிமக்களாக உருவாக்க முடியும். மாணவர்களில் எத்தனையோ மருத்துவர்கள் இருப்பார்கள். எத்தனையோ பொறியியலாளர்கள் இருப்பார்கள். எத்தனையோ அறிவியல் அறிஞர்கள் இருப்பார்கள். அதைக் கண்டுபிடித்துச் சொல்பவர்கள் ஆசிரியர்கள். அதை நோக்கிச் செலுத்துவதற்காகத்தான் ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.

நமது எதிர்காலத்தை உருவாக்கும் பள்ளிக்குக் கோயில் என்று பெயர் வைத்தார் பாரதியார். "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்; எங்கள் பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்" என்றார். ஏன் அப்படிச் சொன்னார் பாரதி? ஏனெனில் கல்விக் கூடங்களில்தான் குழந்தைகளின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படுகிறது. மாணவர்கள் எல்லோரும் எதிர்காலத்திலே மேதைகளாக ஆகவேண்டும். இந்த உலகமே போற்றக்கூடிய அறிஞர்களாக ஆகவேண்டும். அதற்காகத்தான் கோயில்களாகிய பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைக் கொண்டு வந்து விடுகிறோம்.

ஓர் ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுத்தார். அவர்களெல்லாம் பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு என்று படித்து வெற்றி பெற்றார்கள். அதற்குப் பிறகு இந்த ஆசிரியர் என்ன செய்வார்? அவர்களுக்கெல்லாம் வாழ்த்துக் கூறி, 'நீங்கள் எல்லாம் மேலே நன்றாகப் படித்துக் கல்லூரியில் கெட்டிக்காரன் என்று பெயர் வாங்குங்கள்' என்று சொல்லித்தான் அனுப்புவார். அப்படியில்லாமல் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்ததை எல்லாம் திருப்பியா கேட்பார்? 'என்னிடம் இருந்த கல்வியை எல்லாம் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்து விட்டேன். எல்லாக் கல்வியையும்



7th Std - Tamil Term 2.indd 33 01-08-2020 15:11:21

நீங்களே எடுத்துக்கொண்டு போய்விட்டால் அடுத்து வருபவர்களுக்கு நான் எப்படிச் சொல்லிக் கொடுப்பேன்? நான் சொல்லிக்கொடுத்த கல்வியை எல்லாம் திருப்பி கொடுங்க' என்றா கேட்பார்? கேட்கமாட்டார். ஏனென்றால் கல்வியானது கொடுக்கக் கொடுக்க வளரும். பணம் கொடுக்கக் கொடுக்கக் குறையும்.

### கற்க கசடற

படிக்க வேண்டிய நூல்களையும் நன்கு ஆராய்ந்து தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும். சிலர் பத்துப் புத்தகங்கள் எழுதுகிறார்கள். சிலர் ஐம்பது புத்தகங்கள் எழுதுகிறார்கள். ஆனால் திருவள்ளுவர் வாழ்நாள் முழுக்க ஒரே ஒரு நூல்தான் எழுதி இருக்கிறார். அப்படி என்றால் எவ்வளவு சிந்தித்துச் சிந்தித்து எழுதி இருக்க வேண்டும்!

சில நூல்களைப் பற்றிச் சிந்தனை செய்யவே வேண்டாம். சில நூல்கள் படித்தவுடனேயே விளங்கும். சில நூல்களைப் படித்து விட்டு ஆழமாகச் சிந்திக்க வேண்டும். பூமியிலே விளைகின்ற பொருள்களில் சில பூமிக்கு மேலேயே விளையும். கத்தரிக்காய், வாழைக்காய், கீரை இவையெல்லாம் பூமிக்கு மேலே விளையும். சில மண்ணுக்குள்ளேயே உண்டாகி இருக்கும். அவற்றை நாம்தான் தோண்டி எடுக்க வேண்டும். அதுபோல நாம் படிக்கும் நூல்களில் சிலவற்றை ஒரு முறை படித்தால் போதாது. மீண்டும் மீண்டும் ஆழ்ந்து படித்தால்தான் அதன் பொருள் விளங்கும். அப்படிப்பட்ட நூல்களை ஆழ்ந்து ஆராய்ந்து படிக்க வேண்டும். அதனால்தான் திருவள்ளுவர் 'கற்க - கசடற – கற்பவை' என்று சொன்னார். எதைப் படிக்க வேண்டுமோ அதைத்தான் படிக்க வேண்டும். எனவே, நாம் வாழ்நாள் முழுவதும் கற்போம்; கற்க வேண்டியவற்றைக் கற்போம்; நூலின் உட்பொருளை உணர்ந்து கற்போம்; அதன்படி நடந்து வாழ்வில் உயர்வடைவோம்.



**நூல் வெளி**



திருக்குறள் வகுப்புகள் நடத்தியும் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் திருக்குறளைப் பரப்பும் பணி செய்தவர் திருக்குறளார் வீ. முனிசாமி. நகைச்சுவை ததும்பும் தமது பேச்சால் மக்களைக் கவர்ந்தவர் இவர். வள்ளுவர் உள்ளம், வள்ளுவர் காட்டிய வழி, திருக்குறளில் நகைச்சுவை உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். உலகப்பொதுமறை திருக்குறள் உரை விளக்கம் என்னும் இவரது நூல் பெரும் புகழ் பெற்றது. இக்கட்டுரை சிந்தனைக் களஞ்சியம் என்னும் இவரது நூலிலிருந்து தொகுத்துத் தரப்பட்டுள்ளது.



## கற்பவை கற்றபின்

கல்வி தொடர்பான பாடல் வரிகளைத் தொகுத்து எழுதுக.

(எ.கா.) கல்வி கரையில; கற்பவர் நாள் சில.



7th Std - Tamil Term 2.indd 34 01-08-2020 15:11:21

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம் ______.

   அ) கல்வி ஆ) காலமறிதல் இ) வினையறிதல் ஈ) மடியின்மை

2. கல்வியில்லாத நாடு ________ வீடு.

   அ) விளக்கில்லாத ஆ) பொருளில்லாத

   இ) கதவில்லாத ஈ) வாசலில்லாத

3. 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர் ________.

   அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர்

   இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

4. 'உயர்வடைவோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

   அ) உயர் + வடைவோம் ஆ) உயர் + அடைவோம்

   இ) உயர்வு + வடைவோம் ஈ) உயர்வு + அடைவோம்

5. இவை + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______.

   அ) இவைஎல்லாம் ஆ) இவையெல்லாம்

   இ) இதுயெல்லாம் ஈ) இவயெல்லாம்

சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. செல்வம் 2. இளமைப்பருவம் 3. தேர்ந்தெடுத்து

குறுவினா

1. மனிதப் பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?
2. கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
3. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?

சிறுவினா

1. கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.
2. கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?

சிந்தனை வினா

நல்ல நூலின் இயல்புகளாக நீங்கள் கருதுவன யாவை?




7th Std - Tamil Term 2.indd 35 01-08-2020 15:11:21

விரிவானம்

இயல் இரண்டு

# பள்ளி மறுதிறப்பு

FWHRFY




ஒவ்வொரு மனிதனுக்கும் சில கடமைகள் உண்டு. அவை மனிதனின் ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ப மாறுபடும். இளமைப்பருவம் கல்விக்கு உரியது. எனவேதான் "இளமையில் கல்" என்று ஔவையார் கூறினார். இளமையில் கற்கும் கல்வி ஒருவனைச் சான்றோனாக உருவாக்கும். எந்தக் காரணத்திற்காகவும் கல்வி கற்பதைத் தவிர்க்கக் கூடாது என்பதை உணர்த்தும் கதை ஒன்றைப் படிப்போம்.

பள்ளி மறுதிறப்புக்கு இரண்டு நாள்கள் இருந்தன. மதிவாணனுக்குக் கோடை விடுமுறை ஒன்றரை மாதமும் ஓடி விட்டது.

பேருந்து நிறுத்தம் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. "என்ன சிந்தனையடா, மதி?" மதிவாணனின் தோளைத் தொட்டபடி கேட்டான் கவின். சிறுவர்களால் நிரம்பி வழிந்தது பேருந்து நிறுத்தம். "ரெண்டு நாள்லே பள்ளி திறக்கப் போகுது" என்றான் மதிவாணன்.




"பள்ளிக்குப் போகணும்ங்கற கவலையா?"

"கவலையில்லடா, முடிவு பண்ணனும்"

"என்ன முடிவு?"

"பள்ளிக்குப் போறதா, இல்லே பின்னலாடை நிறுவனத்துக்குப் போறதான்னு.."

"நாங்கெளெல்லாம் பின்னலாடை நிறுவனத்துக்குத்தான். நான் முடிவு பண்ணிட்டேன்" என்றான் கவின்.

"எனக்குக் குழப்பம்"

"என்னடா குழப்பம்? வாராவாரம் சம்பளம். திரைப்படம் பாக்கக் காசு கிடைக்குது. சாயங்காலமானா பரோட்டா.. இடையில போண்டா... வீட்ல யாரும் திட்டறதும் இல்லே. மகிழ்ச்சியாத்தானே இருக்கோம். இந்த மகிழ்ச்சி போதும்"



7th Std - Tamil Term 2.indd 36 01-08-2020 15:11:21

கோடை விடுமுறை தொடங்கியபோதும் இந்தக் குழப்பம் மதிவாணனுக்கு இருந்தது. நாலைந்து நாள்கள் அக்காவீடு, அத்தை வீடு போய் வந்தான். தொலைக்காட்சி பார்த்துப் பொழுது போக்கினான்.

நண்பன் கவின் ஒரு நாள் அழைத்தான். "சும்மாதானே இருக்கே. வாடா பின்னலாடை நிறுவனத்துக்குப் போகலாம். புதிய உடைகள், எழுதுகோல்கள், குறிப்பேடுகள், வாங்கப் பணம் சம்பாதிச்சுருவே. இந்த விடுமுறையிலே வீட்லேயும் சுமையா இருக்க வேண்டியதில்லே.. பின்னலாடை நிறுவனத்துக்கு ஆளு வேணும். வாடா.." என்றான்.

சரி என்று சேர்ந்துவிட்டான். ஒன்றரை மாதங்கள் ஓடிவிட்டன. பின்னலாடை நிறுவன வேலை புதுசாக இருந்தது. ஆடைகளை அடுக்கிக் கட்டும் வேலைதான்.

சனிக்கிழமை வாரச் சம்பளம். பத்து மணிக்கும் பிற்பகலிலும் வடை, தேநீர். இரவில் பரோட்டா, தோசை என்று சுவையாகச் சாப்பிட முடிந்தது. அம்மா அவனது சம்பளப் பணத்தைப் பத்திரமாக வைத்திருப்பதாய்ச் சொன்னார். செலவழிந்து போயிருந்தாலும் கொடுத்துவிடுவார். பள்ளி திறக்கும்போது நல்லா செலவு செய்யலாம்.

நல்ல சம்பளம் கிடைக்கிறது. பின்னலாடைக்குத் தேவை மிகுதியாக இருக்கிறது. எனவே வேலைக்குக் குறைவில்லை.

அதிகாரிகள் ஆய்வுக்கு வரும்போது வெளியில் அனுப்பி விடுகிறார்கள். ஒரு வேளை கண்டுபிடித்துவிட்டால், வயது பதினைந்து என்று சொல்லச் சொன்னார்கள். பின்னலாடை நிறுவனத்துக்குப் போய்க்கொண்டே இருந்தால் அவனும் குழந்தைத் தொழிலாளிதான். வாழ்க்கை முழுவதும் தொழிலாளிதான் என்பது நினைவுக்கு வந்தது.


தொழிலாளியாக இருப்பது கேவலம் இல்லை. ஆனால், படிக்கிற வயதில் வேலை தேவையா? மருத்துவர், பொறியாளர், வெளிநாட்டு வேலை என்று அவனுக்குள்ளும் கனவுகள் இருந்தன.

படித்தால் வேறு வேலை பார்க்கலாம். அதிகமான சம்பளம் கிடைக்கும். படித்துவிட்டுச் சொந்தமாகத் தொழிலும் செய்யலாம். அப்படி இல்லாமல் இந்த வயதிலிருந்து தொழிலாளியாகவே வாழ்க்கையைக் கடத்துவதா? சிந்தித்தான்.

கல்வியறிவு முதன்மையானது. ஒரு பட்டமாவது வாங்க வேண்டும். எதிரில் இருந்த விளம்பரப்பலகை கண்ணில் பட்டது. அதில் அம்பேத்கரும் அப்துல் கலாமும் தென்பட்டனர். இவர்களைப் போல் உயரவேண்டுமானால் படிப்பு வேண்டும். படிப்பில்லாமல் உயரமுடியுமா? படிப்பு அடிப்படைத் தேவை.

பள்ளிக்குப் போகவில்லை என்று சொன்னாலும் அப்பா "சரி" என்பார். "சம்பளம் வருதே" என்பார். இந்தக் குறைந்த சம்பளத்திற்காகப் படிப்பைத் தொலைப்பதா? போண்டாவும் வடையும் பரோட்டாவும் வீட்டில் கிடைக்காது. அவற்றுக்கு அடிமையாவதா? தலையை உலுக்கிக் கொண்டான் மதிவாணன்.

வரும் பேருந்துகள் நிரம்பி வழிந்தன. ஒவ்வொரு நாளும் இப்படித்தான். மிகுதியான கூட்டம். பேருந்தில் நுழைவது ஒரு விளையாட்டுச் சாதனை. பின்னலாடை நிறுவனத்துக்குப்




போனால் உடையெல்லாம் கசங்கி அழுக்காகி இருக்கும். இரவும் இதே நிலைதான். பேருந்து ஒன்று வந்தது. கூட்டம் பிதுங்கி வழிந்தது. கவின் மதிவாணனின் கையை இழுத்தான். "கூட்டந்தான். ஆனா போயிடலாம்."

மதிவாணன் தன் அருகில் வந்து நின்ற முதியவரைப் பார்த்தான். முகம் இடுங்கி இருந்தது. மழிக்கப்படாத முகம். சோர்வாக இருந்தார். "இது நல்லூர் போகுமா?" என்று கேட்டார்.

மதிவாணன் வந்து நின்ற பேருந்தைப் பார்த்தான். முதியவரின் பார்வை அக்கம் பக்கமிருந்த சிறுவர்களின்மீது இருந்தது. "என்னப்பா, இது நல்லூர் போகுமா?"

அவர்களுள் ஒரு சிறுவன் பேருந்தின் முகப்பைக் கூர்ந்து கவனித்தான். எதுவும் பேசாமல் புன்முறுவல் வந்தது.

"என்னப்பா போகுமா?" என்று மீண்டும் கேட்டார் அவர்.

"யாருக்குத் தெரியும்? எங்களுக்குப் படிக்கத் தெரியாதே" என்று கூறியபடி ஒரு சிறுவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"சின்னப் பசங்களா இருக்கீங்க. இதுகூட படிச்சுச் சொல்லத் தெரியாதா?"

ஒருவன் வெறுப்புடன் இடைமறித்தான். "பெரியவரே… இதப் படிக்கக்கூட உங்களுக்குத் தெரியாதா…?" 'ஓ…'வென்று கேலியான ஓசை வந்தது. சிரித்தார்கள்.



7th Std - Tamil Term 2.indd 38 01-08-2020 15:11:22

இதைக் கவனித்துக் கொண்டிருந்தான் மதிவாணன். அவர் அருகே சென்றான். "இந்தப் பேருந்து நல்லூர் போகாதுங்க. நல்லூர் பேருந்து வந்தா சொல்றேன்" என்றான்.

"சரி தம்பி".

முதியவருக்குப் படிப்பு இல்லை. பேருந்தில் எழுதி இருப்பதைப் படிக்க முடியவில்லை. இந்த வயதிலும் அவமானப்படுகிறார். கல்வியறிவு இல்லாமல் போய்விட்டால் நானும் இப்படித்தான் வாழ்க்கை முழுவதும் அவமானப்படவேண்டும். நல்ல கல்வியறிவு தலைநிமிர்ந்து நிற்க வைக்கும். நல்ல படிப்புதான் சிறந்த மனிதனாக்கும் என்ற எண்ணம் வந்தது.

பேருந்துகளின் ஓசை காதை அடைத்தது. விறுவிறுவென்று நடக்கத் தொடங்கினான்.

"டேய்!" குரல் கவினிடமிருந்து வந்தது.

"எங்கடா போறே?"

"பள்ளிக்கு"

"பள்ளி திறக்கறதுக்கு இன்னும் ரெண்டு நாள் இருக்கே"

"பள்ளிக்குப் போறேண்டா"

சாலையைக் கடந்தபோது மதிவாணனுக்குப் பெருமூச்சு வந்தது. இறக்கைகளைக் கட்டிக்கொண்டு பறப்பது போல் இருந்தது. இப்படியே பறந்துபோய் யாருமில்லாத பள்ளியை வேடிக்கை பார்க்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

**நூல் வெளி**

இக்கதையை எழுதியவர் சுப்ரபாரதிமணியன். இவர் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்ற கருத்துகளை வலியுறுத்திச் சிறுகதை, புதினம், கட்டுரை முதலியவற்றை எழுதியுள்ளார்; கனவு என்னும் இலக்கிய இதழை நடத்தி வருகிறார். பின்னல், வேட்டை, தண்ணீர் யுத்தம், புத்துமண், கதை சொல்லும் கலை உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

## கற்பவை கற்றபின்

1. 'பள்ளி மறுதிறப்பு' என்னும் கதையை வகுப்பில் நாடகமாக நடித்துக் காட்டுக.
2. எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள்? வகுப்பில் கலந்துரையாடுக.

## மதிப்பீடு

மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.



7th Std - Tamil Term 2.indd 39 01-08-2020 15:11:22

கற்கண்டு

இயல் இரண்டு

# ஓரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம்

GHS2JI

## ஓரெழுத்து ஒருமொழி

ஈ, பூ, கை ஆகிய எழுத்துகளைக் கவனியுங்கள்.

இவை ஒவ்வொன்றிற்கும் பொருள் உண்டு. இவ்வாறு ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவதை ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.

நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் தமிழில் நாற்பத்திரண்டு ஓரெழுத்து ஒருமொழிகள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் நொ, து ஆகிய இரண்டு சொற்களைத்தவிர ஏனைய நாற்பது சொற்களும் நெடில் எழுத்துகளாக அமைந்தவை ஆகும்.

### தெரிந்து தெளிவோம் — ஓரெழுத்து ஒரு மொழிகளும் அவற்றின் பொருளும்

1. ஆ– பசு 2. ஈ– கொடு 3. ஊ– இறைச்சி 4. ஏ– அம்பு 5. ஐ– தலைவன் 6. ஓ – மதகுநீர் தாங்கும் பலகை 7. கா– சோலை 8. கூ– பூமி 9. கை– ஒழுக்கம் 10. கோ–அரசன் 11. சா– இறந்துபோ 12. சீ– இகழ்ச்சி 13. சே– உயர்வு 14. சோ– மதில் 15. தா– கொடு 16. தீ– நெருப்பு 17. தூ– தூய்மை 18. தே– கடவுள் 19. தை– தைத்தல் 20. நா– நாவு 21. நீ– முன்னிலை ஒருமை 22. நே– அன்பு 23. நை– இழிவு 24. நோ– வறுமை 25. பா– பாடல் 26. பூ– மலர் 27. பே – மேகம் 28. பை– இளமை 29. போ– செல் 30. மா– மாமரம் 31. மீ– வான் 32. மூ – மூப்பு 33. மே– அன்பு 34. மை– அஞ்சனம் 35. மோ– மோத்தல் 36. யா– அகலம் 37. வா– அழைத்தல் 38. வீ– மலர் 39. வை– புல் 40. வௌ– கவர் 41. நொ– நோய் 42. து– உண் .

## பகுபதம்

வேலன், படித்தான் ஆகிய சொற்களைக் கவனியுங்கள்.

வேலன் என்னும் சொல்லை வேல் + அன் எனப் பிரிக்கலாம்.

படித்தான் என்னும் சொல்லை படி + த் + த் + ஆன் எனப் பிரிக்கலாம்.

இவ்வாறு சிறுசிறு உறுப்புகளாகப் பிரிக்கும் வகையில் அமையும் சொற்களைப் பகுபதங்கள் என்பர். பிரிக்கப்படும் உறுப்புகளைப் பகுபத உறுப்புகள் எனக் குறிப்பிடுவர்.

### பெயர்ப்பகுபதம்

பகுபதமாக அமையும் பெயர்ச்சொல் பெயர்ப்பகுபதம் ஆகும். இதனை, பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என ஆறு வகைப்படுத்துவர்.

(எ.கா.) 1. பொருள் – பொன்னன் (பொன் + அன்)

2. இடம் – நாடன் (நாடு + அன்)

3. காலம் – சித்திரையான் (சித்திரை + ஆன்)

4. சினை – கண்ணன் (கண் + அன்)

5. பண்பு – இனியன் (இனிமை + அன்)

6. தொழில் – உழவன் (உழவு + அன்)

### வினைப்பகுபதம்

பகுபதமாக அமையும் வினைச்சொல் வினைப்பகுபதம் ஆகும்.

(எ.கா.) உண்கின்றான் – உண் + கின்று + ஆன்

### பகுபத உறுப்புகள்

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் ஆகியவையாகும்.

- Ø பகுபதத்தின் முதலில் அமைந்து முதன்மையான பொருளைத் தருவது பகுதி ஆகும். இது கட்டளையாகவே அமையும்.
- Ø பகுபதத்தின் இறுதியில் அமைந்து திணை, பால், எண், இடம் ஆகியவற்றையோ, முற்று, எச்சம் ஆகியவற்றையோ காட்டுவது விகுதி ஆகும்.
- Ø பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் அமைந்து காலம் அல்லது எதிர்மறையைக் காட்டுவது இடைநிலை ஆகும்.
- Ø பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே இடம்பெறும் மெய்யெழுத்து சந்தி எனப்படும்.
- Ø பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே இடம்பெறும் அசைச்சொல் சாரியை எனப்படும்.
- Ø பகுதி, சந்தி, இடைநிலை முதலியவற்றில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்.

(எ.கா.) வந்தனன் – வா(வ) + த்(ந்) + த் + அன் + அன்

வா – பகுதி. இது வ எனக் குறுகி இருப்பது விகாரம்

த் – சந்தி. இது ந் எனத் திரிந்து இருப்பது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அன் – சாரியை

அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

### பகாப்பதம்

மரம், கழனி, உண், எழுது ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இவற்றை மேலும் சிறிய உறுப்புகளாகப் பிரிக்க முடியாதல்லவா? இவ்வாறு பகுபத உறுப்புகளாகப் பிரிக்கமுடியாத சொல் பகாப்பதம் எனப்படும். இவை அடிச்சொல் அல்லது வேர்ச்சொல்லாக இருக்கும்.

பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகைச் சொற்களிலும் பகாப்பதங்கள் உண்டு.

(எ.கா.) பெயர்ப் பகாப்பதம் – நிலம், நீர், நெருப்பு, காற்று.

வினைப் பகாப்பதம் - நட, வா, படி, வாழ்.

இடைப் பகாப்பதம் - மன், கொல், தில், போல்.

உரிப் பகாப்பதம் - உறு, தவ, நனி, கழி.

## கற்பவை கற்றபின்

1. பாடப்பகுதியில் இடம்பெற்ற சொற்களில் பகுபதம், பகாப்பதம் ஆகியவற்றைக் கண்டறிந்து தனித்தனியே தொகுக்க.
2. உங்கள் வகுப்பு மாணவ-மாணவிகளின் பெயர்களைப் பகுபதம், பகாப்பதம் என வகைப்படுத்துக.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒருமொழிகளின் எண்ணிக்கை _______.

அ) 40 ஆ) 42 இ) 44 ஈ) 46

2. 'எழுதினான்' என்பது _______.

அ) பெயர்ப் பகுபதம் ஆ) வினைப் பகுபதம்

இ) பெயர்ப் பகாப்பதம் ஈ) வினைப் பகாப்பதம்

3. பெயர்ப்பகுபதம் _______ வகைப்படும்.

அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு

4. காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு _______.

அ) பகுதி ஆ) விகுதி இ) இடைநிலை ஈ) சந்தி



7th Std - Tamil Term 2.indd 42 01-08-2020 15:11:22

## பொருத்துக.

1. பெயர்ப் பகுபதம் – வாழ்ந்தான்
2. வினைப் பகுபதம் – மன்
3. இடைப் பகாப்பதம் – நனி
4. உரிப் பகாப்பதம் – பெரியார்

## சரியான பகுபத உறுப்பை எழுதுக.

போவாள் – போ + வ் + ஆள்

போ – _____________

வ் – _____________

ஆள் – _____________

நடக்கின்றான் – நட + க் + கின்று + ஆன்

நட – _____________

க் – _____________

கின்று – _____________

ஆன் – _____________

## பின்வரும் சொற்களைப் பிரித்துப் பகுபத உறுப்புகளை எழுதுக.

1. பார்த்தான் 2. பாடுவார்

## குறுவினா

1. ஓரெழுத்து ஒருமொழி என்றால் என்ன?
2. பதத்தின் இருவகைகள் யாவை?
3. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## சிறுவினா

1. விகுதி எவற்றைக் காட்டும்?
2. விகாரம் என்பது யாது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## மொழியை ஆள்வோம்!

GXAWKU

## கேட்க.

சிறந்த கல்வியாளர்களின் சொற்பொழிவுகளை இணையத்தில் கேட்டு மகிழ்க.



7th Std - Tamil Term 2.indd 43 01-08-2020 15:11:22

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

1. கல்வியின் சிறப்பு.
2. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு.

**சொல்லக் கேட்டு எழுதுக.**

1. இளமைப் பருவத்திலேயே கல்வி கற்க வேண்டும்.
2. கல்வியே அழியாத செல்வம்.
3. கல்வி இல்லாத நாடு விளக்கு இல்லாத வீடு.
4. பள்ளித் தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்.
5. நூல்களை ஆராய்ந்து ஆழ்ந்து படிக்க வேண்டும்.

**கீழ்க்காணும் சொற்களை அறுவகைப் பெயர்களாக வகைப்படுத்துக.**

நல்லூர், வடை, கேட்டல், முகம், அன்னம், செம்மை, காலை, வருதல், தோகை, பாரதிதாசன், பள்ளி, இறக்கை, பெரியது, சோலை, ஐந்து மணி, விளையாட்டு, புதன்

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**அறிந்து பயன்படுத்துவோம்.**

**மூவிடம்**

இடம் மூன்று வகைப்படும். அவை 1. தன்மை 2. முன்னிலை 3. படர்க்கை.

தன்னைக் குறிப்பது தன்மை.

(எ.கா.) நான், நாம், நாங்கள், என், எம், எங்கள்.

முன்னால் இருப்பவரைக் குறிப்பது முன்னிலை.

(எ.கா.) நீ, நீங்கள், நீர், நீவிர், உன், உங்கள்.

தன்னையும், முன்னால் இருப்பவரையும் அல்லாமல் மூன்றாமவரைக் குறிப்பது படர்க்கை.

(எ.கா.) அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை, இவன், இவள், இவை.

**சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக.**

(அது, நீ, அவர்கள், அவைகள், அவை, நாம், என், உன்)

1. ________________ பெயர் என்ன?
2. ________________ ஏழாம் வகுப்பு மாணவர்கள்.



7th Std - Tamil Term 2.indd 44 01-08-2020 15:11:22

3. ________________ எப்படி ஓடும்?

4. ________________ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

5. ________________ வந்து கொண்டு இருக்கிறார்கள்.

**பின்வரும் தொடர்களில் மூவிடப் பெயர்களை அடிக்கோடிடுக. அவற்றை வகைப்படுத்துக.**

1. எங்கள் வீட்டு நாய்க்குட்டி ஓடியது.
2. இவர்தான் உங்கள் ஆசிரியர்.
3. நீர் கூறுவது எனக்குப் புரியவில்லை.
4. எனக்கு, அது வந்ததா என்று தெரியவில்லை. நீயே கூறு.
5. உங்களோடு நானும் உணவு உண்ணலாமா?

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| | | |


**கடிதம் எழுதுக**

உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

## மொழியோடு விளையாடு

**கீழே உள்ள குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டத்தில் எழுத்துகளை நிரப்புக.**

1. காலையில் பள்ளி மணி ________.
2. திரைப்படங்களில் விலங்குகள் ______ காட்சி குழந்தைகளுக்குப் பிடிக்கும்.
3. கதிரவன் காலையில் கிழக்கே ________.
4. நாள்தோறும் செய்தித்தாள் _______ வழக்கம் இருக்க வேண்டும்.






7th Std - Tamil Term 2.indd 45
01-08-2020 15:11:22

**ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.**

1. _________ புல்லை மேயும்.
2. _________ சுடும்.
3. _________ பேசும்.
4. _________ பறக்கும் .
5. _________ மணம் வீசும்.

**பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக.**

(எ.கா.) தா – கொடு

தீ ________________________

பா ________________________

தை ________________________

வை ________________________

மை ________________________

**பின்வரும் சொற்களை இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக.**

ஆறு, விளக்கு, படி, சொல், கல், மாலை, இடி

(எ.கா.) ஆறு – ஈ ஆறு கால்களை உடையது.

தஞ்சாவூரில் காவிரி ஆறு பாய்கிறது.

## நிற்க அதற்குத் தக...

**என் பொறுப்புகள்...**

1. பாடப்புத்தகங்கள் மட்டுமன்றிப் பிற புத்தகங்களையும் படிப்பேன்.
2. பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை எப்போதும் மதித்து நடப்பேன்.

**கலைச்சொல் அறிவோம்.**

| | | | |
|---|---|---|---|
| கோடை விடுமுறை | – *Summer Vacation* | நீதி | – *Moral* |
| குழந்தைத் தொழிலாளர் | – *Child Labour* | சீருடை | – *Uniform* |
| பட்டம் | – *Degree* | வழிகாட்டுதல் | – *Guidance* |
| கல்வியறிவு | – *Literacy* | ஒழுக்கம் | – *Discipline* |

## இணையத்தில் காண்க

அறநூல்களின் பெயர்களை இணையத்தில் தேடி எழுதுக.



7th Std - Tamil Term 2.indd 46 01-08-2020 15:11:22